பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 06 | திங்கட்கிழமை | 19.02.2024 | அதிர்வு 202

## இன்று ஆரம்பமாகின்றது 10 ஆயிரம் வீட்டுத் திட்டம்

இந்திய அரசின் நிதி உதவியுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலுடன் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஒருங்கிணைப்பின் கீழ் மலையகத்துக்கான 06▶

# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப்போட்டால் ரணிலை ஓட ஓட விரட்டியடித்தே தீருவோம்

### ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் சூளுரை




ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்தால் அதற்கு

ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்றும், அப்படிச் செய்தால் மக்களுடன் வீதிக்கு இறங்கி ஜனாதிபதி ரணிலை ஓட ஓட விரட்டியடிப்போம் என்றும் ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"எதிர்வரும் நவம்பர் 06▶



# பொதுவேட்பாளராக ரணிலை களமிறக்க விசுவாசிகள் வியூகம்

## அனைத்துக் கட்சிகளுக்கும் வலைவீச்சு

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை எப்படியாவது வெல்ல வைக்க வேண்டும் என்ற நோக்கில் ரணில் தரப்பு பலதரப்பட்ட வியூகங்களை வகுத்து வருகின்றது என்று ரணில் தரப்பு வட்டாரத்தில் இருந்து அறிய முடிகின்றது.

இதற்காக விரிவான கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், அனைத்து கட்சிகளுக்கும் வலை விரிக்கப்பட்டுள்ளது என்றும் அந்தத் தரப்பு மேலும் கூறுகின்றது. 06▶

## 200 அடி பள்ளத்தில் வீழ்ந்தது லொறி ஒருவர் உயிரிழப்பு இருவர் படுகாயம்



(நானுஓயா நிருபர்)

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா, டெஸ்போட் மேற்பிரிவு காட்டுப் பகுதியில் இருந்து மரங்களை ஏற்றிச் சென்றலொறியொன்றுவீதியை விட்டு விலகி, சுமார் 200 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 06▶




யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதராக இதுவரைப் பணியாற்றிய ராகேஷ் நடராஜ் தமது பணிக் காலத்தை முடித்துக் கொண்டு அடுத்த வாரத்தில் புதுடில்லி திரும்புகின்றார். அதை ஒட்டிய பிரியாவிடை நிகழ்வு நேற்று இரவு யாழ்ப்பாணத்தில் ஒரு ஹோட்டலில் நடைபெற்றது.

இதுவரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக இருக்கும் மாவை சேனாதிராஜாவும், சுமந்திரனும் கூட 06▶




# இராமர் அணை விஷேட பூஜையில் கலந்து கொண்டார் இந்தியத் தூதர்!

**(வாஸ் கூஞ்ஞ)**

இலங்கைக்கான இந்திய புதிய தூதர் வடக்கு மாகாணத்துக்கு மேற்கொண்டுள்ள உத்தியோக பூர்வ விஜயத்தின்போது மன்னாருக்கும் விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது மன்னார் இராமர் அணையில் இடம்பெற்ற விஷேட பூஜையிலும் கலந்து கொண்டார்.

கடந்த வியாழக்கிழமை (15) இந்திய தூதர் எச்.ஈ.சந்தோஷ்சா ஜா தனது பாரியாருடன் மன்னாருக்கு முதல் முறையாக வருகை தந்திருந்தார்.

மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு சிறு அன்பளிப்பு செய்ய வேண்டும் என்ற நோக்கில் இங்குள்ள நான்கு மீனவ அமைப்புகளுக்குக் குளிர் சாதனப் பெட்டிகள் மன்னார் மாவட்ட செயலகத்தில் வைத்து மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகவேஸ்வரனின் பங்களிப்புடன் கையளித்தார்.

தலா சுமார் ரூபா ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட பெறுமதியான குளிர்சாதனப் பெட்டிகளை முசலி, நானாட்டான் , மன்னார் மற்றும் விடத்தில்தீவு ஆகிய நான்கு மீனவ சமாசங்களுக்கு வழங்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து இந்தியத் தூதர் கொண்ட குழுவினர் தலைமன்னார் இராமேஸ்வரத்துக்கு இடையில் உள்ள இராமர் அணை என்று அழைக்கப்படும் தீடையின் இரண்டாம் மணல் திட்டியில் நடைபெற்ற விஷேட பூஜையில் கலந்து கொண்டனர்.













# சிவனொளிபாத மலைக்குச் சென்ற வாகனங்கள் விபத்து! 10 பேர் காயம்!

சிவனொளிபாத மலைக்கு யாத்திரைக்கு சென்ற வானும் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளானதில் 10 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்று (18) பிற்பகல் ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை – மில்லகஹமுல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கம்பஹா பகுதியிலிருந்து யாத்திரிகர்கள் குழுவை ஏற்றிச்சென்ற வான் ஒன்றும் மாத்தறை பகுதியில் இருந்து யாத்திரிகர்கள் குழுவை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த இருவர் கினிகத்தேனை வைத்தியசாலையில் இருந்து நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்தில் வானும் பஸ்ஸும் பலத்த சேதமடைந்துள்ளன. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கையின் கரையோர பாதுகாப்புக்கு விமானம் வழங்க அமெரிக்கா தீர்மானம்

இலங்கையின் கரையோர பாதுகாப்புக்காக விமானம் ஒன்றை வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

அமெரிக்க இராஜதந்திரி டோலண்ட்லு இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

விசேட சந்திப்பொன்றில் கலந்து கொண்ட அவர், இலங்கைக்கு ‘கிங் எயார்’ விமானமொன்று வழங்கப்படவுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த விமானம் இந்த வருடத்துக்குள் பெற்றுக்கொடுக்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா இதற்கு முன்னர் இலங்கையின் கரையோரப் பாதுகாப்புக்காகப் பாதுகாப்புப் படையினருக்கு படகுகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# பிறந்த நாள் விழாவில் கத்திக்குத்து; காயமடைந்த இளைஞன் உயிரிழப்பு!

புத்தளம் பகுதியில் வீடொன்றில் இடம்பெற்ற பிறந்த நாள் விழாவில் ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்காகி புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என்று புத்தளம் தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம், வேப்பமடுவ பிரதேசத்தில் வசித்து வந்த 32 வயதுடைய ஜி.ஜி.அமித் மதுரங்க என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிறந்த நாள் விழாவின் போது இரு சகோதரர்களுக் கிடையில் ஏற்பட்ட கைகலப்பே இந்த கொலைக்கான காரணம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் புத்தளம் தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓட்டோ மீது தாக்குதல் நடத்திவிட்டு இனந்தெரியாதோர் தப்பியோட்டம்!

யாழ். நகரிலிருந்து ஆவரங்கால் நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஓட்டோ மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்று (18) இரவு 7 மணியளவில் இராச வீதி, மாசுவன் சந்திக்கு அருகிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

ஆவரங்கால் மேற்கைச் சேர்ந்த பாபனா ஜெயம் சகீதரன் என்பவரின் ஓட்டோ மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சாரதி கூக்குரலிட்டதை அடுத்துத் தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

ஓட்டோவின் கண்ணாடி சேதமடைந்துள்ளது. சாரதி காயங்கள் இன்றித் தப்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.




# நான் புலிகளுக்கு எதிரானவன் அல்லன் இப்படி அதுரலியே ரத்னதேரர் விளக்கம்

தான் விடுதலைப் புலிகளுக்கு எதிரானவன் அல்லன் என்று வண.அதுரலியே ரத்ன தேரர் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

பொதுநிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

என்னைப் பற்றி பெரும்பாலானவர்கள் நான் சிங்கள இனவாதி, புலிகளுக்கு எதிரானவன் என்று கற்பிதம் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் நான் அப்படியானவன் அல்லன். அந்தந்த சந்தர்ப்பங்களின் அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்பவே எனது கருத்துக்களை வெளியிட்டிருந்தேன்.

மற்றபடி நான் மக்களை மையப்படுத்திய பொருளாதாரத் தன்னிறை குறித்த கொள்கையைக் கொண்டவன்.

மேற்கத்தேய நாடுகளுக்கு அடிமைச் சேவகம் புரிவதை எதிர்க்கும் நாட்டுப்பற்றாளன். – என்றும் அவர் தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.






# விமானப்படையின் 73 ஆவது வருட நிறைவு தின விழா வடக்கில் மார்ச் 2 முதல் பல்வேறு கொண்டாட்டங்கள்

- வடக்கில் 73 பாடசாலைகளில் ரூ.10 கோடி அபிவிருத்திப் பணி
- 73 ஆயிரம் புத்தகங்கள் வடக்குப் பாடசாலகளுக்கு அன்பளிப்பு
- மார்ச் 6 முதல் 10 வரை யாழ். முற்றவெளியில் கொண்டாட்டங்கள்
- பரசூட் சாகசங்கள், விமான சாகசங்கள், விமான கண்காட்சிகள்
- இந்திய ஹெலிகளின் சாகசம், தற்காப்புக்கலை நிகழ்வுகள்
- கலாச்சர நிகழ்வுகளும், இரவு நேர இசை, களியாட்ட நிகழ்வுகளும்

இலங்கை விமானப்படையின் 73 ஆவது வருட நிறைவு விழா எதிர்வரும் 2024 மார்ச் 02 ஆம் திகதி வடக்கில் கொண்டாடப்படுகின்றது .

அதனை ஒட்டி வடமாகாணத்தை முன்னிலைப்படுத்தி "நட்பின் சிறகுகள்" எனும் விமானப்படை சமூக சேவை அமைப்பின் ஊடாகப் பல்வேறு சமூகப்பணித் திட்டங்களை விமானப் படை முன்னெடுக்கின்றது.

இலங்கை விமானப்படை தினக் கொண்டாட்டம் அனைத்து மத சடங்குகளுக்கும் முன்னுரிமை அளித்து ஆரம்பமாகும்.

இந்த வருடமும் விமானப்படை தலைமையகத்தில் விமானப்படையின் மரியாதை அணிவகுப்பு நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி நோக்கங்களுக்கு இணங்க தரமான கல்வி மற்றும் சுற்றாடல் நிலைத்தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்தி - வடமாகாணத்தில் சமூக அபிவிருத்தித் திட்டங்களில் கவனம் செலுத்தி - விமானப்படைத் தினத்தை இம்முறை கொண்டாட எதிர்பார்க்கப்படுவதாக விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தெரிவித்தார்.

வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கி, அபிவிருத்தி செய்யப்படவுள்ள 73 பாடசாலைகள் இனங்காணப்பட்டு, அந்தப் பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கான மதிப்பீடு 100 மில்லியன் ரூபா ஆகும். இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு 73 ஆயிரம் புத்தகங்கள் பரிசாக வழங்கப்படவுள்ளன. இதற்காக 25 மில்லியன் ரூபா செலவிடப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், "யுசை வுயவவழழ 2024" தொழில்நுட்பக் கல்வி கண்காட்சி மற்றும் நிறைவு விழாக் கொண்டாட்ட நிகழ்வுகள் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் எதிர்வரும் மார்ச் 6ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இங்கு இலங்கை விமானப்படையின் விமானங்கள் மற்றும் வளங்களின் கண்காட்சி மற்றும் விமானப்படையின் பணிகள் மற்றும் தொழில்நுட்ப கல்வி பற்றிய விழிப்புணர்வு நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இதன்போது பரசூட் சாகசங்கள், இலங்கை விமானப்படையின் விமான சாகசங்கள் மற்றும் விமான கண்காட்சிகள், விமானப்படை மோப்பநாய்களின் சாகச நிகழ்வுகள், பொழுதுபோக்கு நிகழ்வுகள் மற்றும் ட்ரோன் விமானங்களின் நிகழ்வுகள், விளையாட்டுத் தொகுதிகள் மற்றும் தற்காப்புக்கலை நிகழ்வுகள் மற்றும் அடிமுறை சண்டைக் காட்சிகள், இந்




திய விமானப்படையின் ஹெலிக்கொப்டர் சாகச நிகழ்வுகள், மற்றும் கலாச்சர நிகழ்வுகளும், இரவு நேர இசைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

விசேடமாக மாணவர்களின் கல்விக்காக பயன்படுத்தக்கூடிய விமானப்படையினர் பயன்படுத்தும் செயலிழந்த விமான இயந்திரம் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்பு செய்யப்படவுள்ளது. இதனுடன் நாடளாவிய ரீதியில் 73 ஆயிரம் மரக்கன்றுகளை விநியோகிக்கும் திட்டமும், இலங்கையின் மிகப் பெரிய சைக்கிள் சவாரியான இலங்கை விமானப்படை "குவன் சைக்கிள் சவாரி" சைக்கிள் ஓட்டப்போட்டியும் ஐந்து நாள்களுக்கு நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளை விமானப்படை விமானப் பொறியியல் பணிப்பாளர் நாயகமும் இந்த நிகழ்வின் ஏற்பாட்டு குழுவின் தலைவருமான எயார் வைஸ் மார்ஷல் முதித மஹவத்தகே முன்னிலை வகித்து நடத்துவதோடு வட மாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் யாழ் வர்த்தக சங்கத்தினரின் ஆதரவும் கிடைக்கப்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம், இந்த சமூக சேவைத் திட்டங்களுக்கான அனைத்துச் செலவுகளும் இலங்கை அரசின் தலையீடு இல்லாமல் இடம்பெறுவதோடு, அதற்காக உள்நாட்டிலு ம் வெளிநாட்டிலும் பெரும் பங்களிப்பும் கிடைக்கப்பெறுவதாகவும் விமானப் படை தெரிவித்துள்ளது. இந்தத் தித்திட்டத்திற்கு பொதுமக்கள் தொடர்ந்து தங்களது ஆதரவை வழங்க வேண்டும் என்று விமானப்படையினால் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்நிகழ்விற்கு வந்திருந்தனர். இடையில் இருவரும் சந்தித்து இரண்டொரு விடயங்களை மட்டும் பேசிக் கொண்டனர். அப்போது அருகில் என் நண்பர் ஒருவர் இருந்தார். நானும் சற்றுத் தொலைவில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். பின்னர் என்ன நடந்தது என்று விசாரித்தேன்.

"நீங்கள் யாழ்ப்பாணத்தில்தான் நிற்கின்றீர்களா?" – என்ற சாரப்பட சுமந்திரனிடம் கேட்டாராம் மாவை.

"ஆம். இரண்டு,மூன்று தினங்களாக நிற்கிறேன். நாளை யாழ்ப்பாணத்தில் சில வழக்குகள் இருக்கின்றன. அவற்றை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்புகிறேன்!" – என்று பதில் அளித்தாராம் சுமந்திரன்.

ஆக, நீண்ட நாள்களுக்குப் பின்னர் இருவரும் நேரில் ஆளையாள் கண்டு கொண்டனர். பேசிக் கொண்டனர். ஆனால் தமிழரசுக் கட்சிக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கு குறித்து ஒரு வசனம் கூட சுமந்திரனுடன் மாவை பேசவே இல்லை எனத் தெரிகின்றது.

தமிழரசு தொடர்பான அனைத்து வழக்குகளுக்குமாக கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக 'சுமா', 'சுமா' என்று சுமந்திரனுக்குப் பின்னால் அலைந்த மாவை, இப்போது சுமந்திரனை அந்நியனாகப் பார்க்கும் நிலைமை. தமிழரசுக்கு எதிரான தற்போதைய வழக்குகளுக்கு சுமந்திரன்தான் பின்னணி என்ற சிறீதரன் அணியின் நிலைப்பாட்டை மாவையும் விழுங்கிக் கொண்டு விட்டார் என்பதுதான் இதன் அர்த்தம். பாவம் சுமந்திரன்...!

கட்சி அழைத்தால் இந்த வழக்குகளில் கட்சிக்காக நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாதாடுவேன் என்ற சுமந்திரனின் அறிவிப்பை மாவையரும் நம்பவில்லை என்றுதான் புரிகின்றது.

இந்த விடயத்தை ஒட்டி இன்னொரு சம்பவம். மூன்று நாள்களுக்கு முன்னர் பிறிதொரு ஹோட்டலில் நடந்தது. யாழ். வந்திருந்த இலங்கைக்கான இந்தியத் தூதர் சந்தோஷ் ஜா வடக்கின் அரசியல் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களைச் சந்திக்கும் நிகழ்வு அது.

ஒரு வட்டமேசையில் சுமந்திரன், கஜேந்திரகுமார், கஜேந்திரன் என மூன்று எம்.பிக்கள் மற்றும் சிலருடன் நானும் அமர்ந்திருந்தேன். பொது விடயங்கள் பற்றி பேசினோம்.

அப்போது கஜேந்திரகுமாரின் கட்சி அலுவலகம் குறித்துப் பேச்சு வந்தது. அங்கு தமது கட்சித் தலைவர்களின் படங்கள் எதுவும் தொங்கவிடப்படவில்லை என்றார் கஜேந்திரகுமார்.

"கட்சித் தலைவர் என்ற முறையில் உங்கள் படம் கூட இல்லையா?" – என்று ஒருவர் கேட்டார்.

"இல்லை.இல்லை" – என்று பதிலளித்த அவர் இன்னொரு விடயத்தையும் சொன்னார்.

"எனது படத்தை வைக்கக் கேட்டார்கள் நம் கட்சியினர். நான் மறுத்து விட்டேன். ஆனால் அவர்களிடம் ஒன்று சொன்னேன். இப்படி இன்று எங்கள் கட்சி வளர்ந்து இருப்பதற்குக் காரணமான வர்களுக்குப் படம் வைப்பது என்றால் சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும்தான் வைக்க வேண்டும். விருப்பம் என்றால் அவர்களின் படங்களை எங்கள் கட்சி அலுவலகத்தில் தொங்கவிடலாம் என்று கூறினேன்." – என்றார் கிண்டலாக கஜேந்திரகுமார். எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தனர் – சுமந்திரன் உட்பட.

அப்போது நான் ஒரு கொமெண்ட் அடித்தேன். அதைக் கேட்டு எல்லோரும் கெக்கட்டம் விட்டுச் சிரித்தனர் – சுமந்திரனும் கூட.

"ஓம். அவருக்கு (சுமந்திரனுக்கு) இனி அவரது கட்சி கூடப் படம் வைத்து மரியாதை செலுத்தாது. நீங்களாவது அதைச் செய்யுங்களேன்!" – என்று கஜேந்திரகுமாரைப் பார்த்து விநயமாகக் கேட்டேன் நான்.

எல்லோரும் என் கொமெண்ட்டை Sportive ஆக எடுத்துக்கொண்டு சிரித்து, ருசித்து மறந்தார்கள். சுமந்திரனும்தான்.

நான் பகிடியாகச் சொன்னாலும் அதுதான் இன்று சுமந்திரனின் நிலைமை.

மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன். – பழி ஓரிடம் பாவம் ஒரு இடம்...!

இந்த வழக்குகளுக்கு பின்னால் சுமந்திரன் இல்லை. யார் சூத்திரதாரி என்பது ஓரளவுக்கு மாவைக்கும் நன்கு தெரியும் என்று நான் நினைக்கிறேன். அவர்களோடு எல்லாம் மாவை அடிக்கடி உரையாடிக் கொண்டுதான் இருக்கிறார். காலம் வரும்போது உண்மை வெளியாகும்...!

## ஜனாதிபதித் தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாதம் நடுப் பகுதியில் இப்போதுள்ள ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிகின்றது. அரசமைப்பின்படி, அதற்கு முன்னதாகவே ஜனாதிபதித் தேர்தலை நடத்தி ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும்.

அந்தத் தேர்தலை ஒத்திப்போடுவதற்கோ அல்லது வேறு ஏதும் சதி செய்வதற்கோ இடம்கொடுக்கமாட்டோம். மக்களை வீதிக்கு இறக்கி இந்த அரசை விரட்டுவோம்." – என்றார்.

## 200 அடி பள்ளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவர் பலியாகியுள்ளார். அத்துடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நானுஓயா நகருக்கு செல்வதற்காக அந்த லொறியில் பயணித்த நானுஓயா, டெஸ்போட் தோட்டம் – வாழைமலை பிரதேசத்தைச் சேர்ந்த வடமலை மயில்வாகனம் (வயது 58) என்பவரே சம்பவ இடத்தில் சாவடைந்துள்ளார்.

விபத்துக்குள்ளான லொறியின் சாரதியும், உதவியாளரும் படுகாயங்களுடன் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இயந்திரக் கோளாறு காரணமாக லொறி வீதியில் இருந்து விலகி, விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

நேற்றுஇடம்பெற்றஇந்தவிபத்துதொடர்பில் மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## பொதுவேட்பாளராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக அன்றி பொது வேட்பாளராகவே நிறுத்தப்படுவார் என்று ரணில் தரப்பு வட்டாரம் தெரிவிக்கிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனித்து வேட்பாளர் ஒருவரைக் களமிறக்காது ரணிலையே இறக்கும் வகையில் மொட்டுக் கட்சிக்குள் இருந்து பிரசன்ன ரணதுங்க மற்றும் நிமால் லான்சா உள்ளிட்ட மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்து வருவதை அவதானிக்க முடிகின்றது.


அதேபோல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றவர்களும் சு.க தனித்து வேட்பாளரை நிறுத்தாமல் ரணிலுக்கே ஆதரவு வழங்கும் வகையில் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

மேலும், ரணிலின் விசுவாசிகள் நாலா பக்கமும் ஓடி எல்லாக் கட்சிகளுக்கும் வலை வீசி வருகின்றனர்.

## இன்று ஆரம்பமாகி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

10 ஆயிரம் பாரத் – லங்கா எனும் வீட்டுத் திட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.



முதற்கட்டமாக ஆயிரத்து 300 வீடுகளுக்கு ஒரே தடவையில் நிர்மாணப் பணிகளுக்கான அங்குரார்ப்பணம் இடம்பெறவுள்ளது.

இதன் பணிகளை எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்துக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நுவரெலியா, கண்டி, பதுளை, மாத்தளை, கேகாலை, குருநாகல், இரத்தினபுரி, காலி, களுத்துறை மற்றும் மொனராகலை ஆகிய 10 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் 45 தோட்டங்களில் இன்று நிர்மாணப் பணிகளுக்கான அங்குரார்ப்பண விழா நடைபெறுகின்றது.

இதன் பிரதான நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறும். இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா ஆகியோரின் பங்கேற்புடன் நிகழ்நிலை மூலம் பிரதான நிகழ்வு இடம்பெறும்.

அதேபோல 45 தோட்டங்களுக்கும் மக்கள் பிரதிநிதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் மிகவும் நேர்த்தியான முறையில் அமைச்சர் ஜீவன் தொண்டமானால் நெறிப்படுத்தப்பட்டுள்ளது.




# கட்டைக்காடு கடலில் படுகொலை செய்யப்பட்ட 10 மீனவர்களின் 30ஆம் ஆண்டு நினைவேந்தல்

(ந.லோகதயாளன்)

யாழ். வடமராட்சி கிழக்கு, கட்டைக் காட்டில் 1994 ஆம் ஆண்டு மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 10 மீனவர்களின் 30ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

1994.02.18 அன்று அதிகாலை சுண்டிக்குளம், தொடுவாய் வாய்க்கால் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையில் இலங்கைக் கடற்படையின் டோறா படகுகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 10 மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவேந்தல் நிகழ்வு கட்டைக்காடு சென்மேரிஸ் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொதுச்சுடரை கட்டைக்காடு பங்குத்தந்தை அமல்ராஜ் ஏற்றிவைக்க, உயிரிழந்த 10 மீனவர்களினதும் உறவுகள் சுடர் ஏற்றி இறந்த தமது உறவுகளுக்கு கண்ணீர்மல்க அஞ்சலி செலுத்தினர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பொலிஸைத் திருத்துவது எப்போது?

'ஊருக்கடி உபதேசம் உனக்கு இல்லையடி!' என்பதாகத்தான் பெரும்பாலும் ஒவ்வொரு தரப்பினரதும் - ஒவ்வொருவரினதும் - செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

அதற்கு இலங்கைப் பொலிஸ் துறையும் விதிவிலக்கல்ல.

குற்றங்களையும் குற்றவாளிகளையும் மடக்கிப் பிடிப்பதில் தாங்கள் அசகாய சூரர் என்று காட்டுவதற்கு இலங்கைப் பொலிஸார் புதுப்புது டெக்னிக் பற்றி எல்லாம் தகவல் வெளியிடுகின்றார்கள்.

ஆனால் குற்றச் செயல்களின் மையமாக இருக்கும் தமது பொலிஸ் தரப்பை 'வெள்ளாவி வைத்து வெளுத்து எடுப்பதற்கான' ஒரு திட்டமோ, நோக்கமோ அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

உதாரணத்துக்கு ஒரு விடயம்.

போக்குவரத்துக் குற்றம் இழைக்கும் வாகன சாரதிகளை மடக்கிப் பிடிக்கும் ஒரு திட்டம் குறித்து - புதிய 'டெக்னிக்' பற்றி - பொலிஸ் துறை இப்போது தகவல் வெளியிட்டிருக்கின்றது.

கொழும்பில் குற்றம் இழைக்கும் வாகன சாரதிகளை சி.சி.ரி.வி. கண்காணிப்பு கமராக்கள் மூலம் அடையாளம் கண்டு மடக்கும் ஒரு திட்டத்தை பொலிஸார் ஆரம்பித்திருக்கின்றனராம்.

இதன்படி போக்குவரத்து விதிகளை அப்பட்டமாக மீறிய 739 வாகன சாரதிகளை கொழும்பில் பொருத்தப்பட்டிருக்கும் சி.சி.ரி.வி. கமரா பொறிமுறை மூலம் பொலிஸார் அடையாளம் கண்டிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

போக்குவரத்துப் பொலிஸார் சி.சி.டி.வி. கமரா மூலம் கண்டுபிடித்த இந்தப் போக்குவரத்து விதிமுறை மீறல் குற்றங்கள் தொடர்பான வீடியோப் பதிவுகள் 300 பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் -

குற்றம் இழைத்தோரைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அந்தந்தப் பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் - பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்டுவ தெரிவித்தார்.

இப்படிசி.சி.ரி.வி. கமராக்கள்மூலம்போக்குவரத்து விதிமீறல்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையை ஜனவரி 22ஆம் திகதி பொலிஸார் ஆரம்பித்தனர் என்றும் -

முதலில் இது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் -

இப்போது பெப்ரவரி முதலாம் திகதி முதல் அந்தத் திட்டம் செயற்படத் தொடங்கியுள்ளது என்றும் - கூறப்படுகின்றது.

இது, இலங்கையில் இப்போது புதிய அறிமுகமாக இருக்கலாம். ஆனால் வளர்ச்சி அடைந்த நாடுகள் பலவற்றிலும் இது எப்போதோ அறிமுகப்படுத்தப்பட்டு, இப்போது பல பத்தாண்டுகளாக அங்கெல்லாம் நடைமுறையில் இருக்கின்றது.

ஆனாலும் அந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் ஒரு வித்தியாசம் இருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

நாட்டில் லஞ்சம், ஊழல் மலிந்த இடம் எது என்று சாதாரண நபர் ஒருவரிடம் கேட்டால் போக்குவரத்து பொலிஸார் நிற்கும் வீதி என்று எவரும் 'டக்'கென்று பதில் சொல்வர்.

லஞ்சம் ஊறிக் கிடக்கும் போக்குவரத்துப் பொலிஸை வெள்ளாவி வைத்து வெளுத்தெடுக்க முடியாத பொலிஸ் தலைமை, நாட்டில் போக்குவரத்துக் குற்றம் இழைத்தோரை மடக்கிப் பிடிப்பதாகப் புளுகி, அதைப் பெரிய விடயமாகக் காட்டுவது 'ஊருக்கடி உபதேசம் உனக்கில்லையடி!' என்ற கதைதான்.

இப்படி சி.சி.ரி.வி. கமரா வைத்துப் போக்குவரத்து விதிமுறை மீறல் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் மேற்குலகில் போக்குவரத்துப் பொலிஸார் 'லஞ்சம் பிடுங்கும் பேய்களாக' அலைவதில்லை.

இத்தகைய சி.சி.ரி.வி. கமராக்களை இரகசியமாகப் பொருத்தி, போக்குவரத்துக் குற்றம் இழைக்கும் வாகன சாரதிகளை மடக்கும் திட்டத்தை சாதுரியமாகக் கட்டவிழ்க்கும் பதில் பொலிஸ்மா அதிபருக்கும், ஏனைய மூத்த பொலிஸ் அதிகாரிகளுக்கும், இப்படி வீதிகளில் லஞ்சம் பிடுங்கும் வெள்ளை ஹெல்மெட் பொலிஸாரை அதே சி.சி.ரி.வி. கமராக்கள் வைத்து மடக்கிப் பிடித்து பொலிஸ் சேவையை உன்னதமாக்க முடியாதிருப்பது ஏன்?

போதைவஸ்துப் பாவனை, விற்பனை, கடத்தல் போன்றவற்றுடனும், பாதாள உலகக் குழுக்களுடனும் தொடர்புபட்டவர்களை மடக்குவதற்கு வரலாற்றில் இல்லாத மாதிரி 'யுக்திய' என்ற பெயரில் மிகப்பெரிய பொலிஸ் நடவடிக்கையை ஆரம்பித்திருக்கும் பொலிஸ் மா அதிபராலும், பொதுப் பாதுகாப்பு அமைச்சரிரான் அலஸினாலும் குற்றக் குகையாக இருக்கும் பொலிஸ் துறையைத் திருத்தி அமைத்துச் சீராக்க முடியாமல் இருப்பது ஏன்?

திருத்தம் என்பது முதலில் வீட்டில் இருந்து தொடங்க வேண்டும். வீட்டுக்கு வெளியில் நாட்டில் மட்டுமல்ல. இது பொலிஸ் நிலையங்களுக்கும் பொருந்தும்.




# யாழில் 500 ஏக்கர் சுவீகரிப்பு சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக்கானதா...?

- நடராசா லோகதயாளன் -

யாழ்ப்பாணம் விமான நிலைய அபிவிருத்தி என்னும் பெயரில் விமான நிலையத்துக்கு எதிர் திசைகளிலும் நிலத்தை அபகரிக்க முயற்சிப்பது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறத என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பலாலி விமான நிலையம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டபோது, அதற்குச் செல்வதற்கான பிரதான வீதி கிழக்குத் திசையில் பலாலி வீதியில் இருந்து மேற்குத் திசையில் உள்ள கட்டுவன் மயிலிட்டி வீதிக்கு மாற்றப்பட்டது.

ஏற்கெனவே ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் இன்னும் இலங்கை பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில், இப்போது விமான நிலையத்தைச் சுற்றி மேலும் நிலங்களைக் கபளீகரம் செய்யும் செயற்பாடும் தொடங்கியுள்ளது.

தற்போது சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை 500 ஏக்கர் நிலத்தைச் சுவீகரித்துத் தருமாறு கோருவதன் நோக்கம் விமான நிலைய ஓடுபாதை மற்றும் விமான நிலைய அபிவிருத்தி எனக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணம் சர்வதே விமான நிலையத்தில் இன்று தரை இறக்கப்படும் 80 ஆசணங்களைக் கொண்ட விமானம் ஒன்றைத் தரை இறக்க 950 மீற்றர் ஓடு பாதையும் அடுத்த தர விமானமான 150 பயணிகள் பயணிக்கத்தக்க விமானங்களை தரை இறக்குவதானால் 2 ஆயிரத்து 300 மீற்றர் ஓடு பாதையும் போதுமானது.

ஆனால், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் தற்போதே கைவசம் 2 ஆயிரத்து 300 மீற்றர் நீளமான ஓடு பாதை உள்ளபோதும் 950 மீற்றர் ஓடுபாதை மட்டுமே பயன்படுத்துவதன் காரணமாகவே இங்கே 150 பயணிகள் பயணிக்கத்தக்க விமானங்கள் தரையிறக்க முடியவில்லையே அன்றி 2 ஆயிரத்து 300 மீற்றர் நீளமான ஓடுபாதை இல்லை என்பது தவறான கூற்று. இப்போது இருக்கும் 2 ஆயிரத்து 300 மீற்றர் நீளமான ஓடு பாதையில் 500 மீற்றர் வரையான ஓடுபாதை செப்பனிடப்பட வேண்டும் என்பது மட்டுமே உண்மையானது.

இதேநேரம், யாழ்ப்பாணம் விமான நிலையத்தின் பிரதான நுழைவாயில் கிழக்குத் திசையில் இருந்தபோது காணப்பட்ட இடவசதிகள் தற்போதும் உள்ள போதும் அவை படையினரின் பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டு மேலதிக நிலத்தைச் சுவீகரிப்பதே தற்போதைய திட்டமாக காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் அமைத்துள்ள தற்போதை இடத்துக்குப் பலாலி வீதி ஊடாக உள் நுழையும்போது பலாலி வீதியின் மேற்கே பெரும் பிரதேசம் காணப்படுவது மட்டுமன்றி பலாலி வீதிக்கு கிழக்கே எந்தவொரு விமான நிலைய பயன்பாடும் இன்றி வெறுமனே படையினரின் பிடியில் 642 ஏக்கர் நிலம் இன்றும் உள்ளது.

இந்த 642 ஏக்கர் நிலத்தையும் முழுமையாக விடுவிப்பதாக அரசால் பல தடவை படம் காட்டப்பட்ட போதும் அந்த நிலங்கள் இன்றுவரை விடுவிக்கப்படவில்லை.

தற்போது காங்கேசன்துறை வீதி எவ்வாறு கடற்கரை வரையில் செல்கின்றதோ அதேபோன்று பலாலி வீதியில் தற்போது வசாவிளானில் போடப்பட்டுள்ள இராணுவத் தடையை அகற்றி கடற்கரை வரையில் பயணிக்கவும் பலாலி வீதிக்கு கிழக்கே உள்ள 642 ஏக்கர் நிலம், குரும்பசிட்டியில் தற்போது படையினர் வசம் உள்ள 126 ஏக்கர் என பவற்றுடன், மயிலிட்டியில் மீனவர்களின் குடியிருப்பு நிலமான 150 ஏக்கர் என மொத்தம் 918 ஏக்கர் நிலத்தையும் விடுவிக்க நடவடிக்கை இடம்பெறுகிறது என்று தற்போதைய அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தாவின் ஏற்பாட்டில் மாவட்ட மேலதிக அரச அதிபர் வரைபடங்கள் தரவுகளுடன் கொழும்புக்கு விரைந்தார்.

2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7ஆம் திகதி பிரதமர் அலுவலகத்தில் பிரதமர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட மேலதிக செயலாளர் முரளிதரன் உள்ளிட்டோர் முன்னிலையில் பிரதேச வரைபடம், அந்த நிலத்தில் குடியமர தயாராகவுள்ள மக்கள் எண்ணிக்கை போன்றவை விவரங்களுடன் ஆராயப்பட்ட போது ஏதோ உடனடியாக நிலம் விடுவிப்பதுபோன்ற மாயை உருவானது.




இவ்வாறெல்லாம் விமான நிலையத்துக்கும் அப்பால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலம் வலி வடக்கில் படையினரின் பிடியில் உள்ளபோதே தற்போது மேலும் 500 ஏக்கர் சுவீகரிப்பதற்கான முயற்சி இடத்பெறுவது மக்களுக்குப் பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது.

விமான ஓடுபாதை நீளம் போதாது எனக் கூறும் சிவில் விமான

10 ▶




# யாழில் 500 ஏக்கர் சுவீகரிப்பு சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக்கானதா...?

(9ஆம் பக்கத் தொடர்ச்சி...)

போக்குவரத்து அதிகார சபை, விமான ஓடுபாதை உள்ள வடக்குத் தெற்குத் திசையில் நிலத்தை கோரவில்லை. மாறாக விமான ஓடுபாதையின் முன்பாக அலுவலகம், அதன் முன்னே பாரிய நிலப் பிரதேசத்துக்கு முன்பாக உள்ள கட்டுவன் மயிலிட்டி வீதிக்கும் மேற்குத் திசையில் உள்ள நிலங்களை கோரி நிற்பதே பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

ஏனெனில், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் தற்போதைய பிரதான நுழைவாயில் அமைந்துள்ள கட்டுவன் மயிலிட்டி வீதியில் வெறும் 3 ஏக்கர் நிலத்தை விடுவிக்க மறுத்து மக்களின் காணிகளை ஊடறுத்து வீதி அமைக்கும்போது இதற்கு அப்பால் எக்காரணம் கொண்டும் இனி படையினர் நில அபகரிப்பில் ஈடுபடமாட்டார்கள் என்ற உத்தரவாதம் வழங்கப்பட்டது.

போர் முடிந்து 15 ஆண்டுகள் பின்னரும், படையினர் வலிந்து ஏராளமான ஏக்கர் நிலங்களை விடுவிக்காமல் இருப்பது தமிழ் மக்களின் மன வேதனையை மேலும் அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் விரிவாக்கத்துக்கு என்று கூறி இன்னும் விடுவிக்கப்படாமல் இருக்கும் நிலப் பகுதியில் சைவ ஆலயங்கள், பாடசாலைகள் சிக்குண்டுள்ளன. அவ்வாறு சிக்குண்டுள்ள ஆலயங்களில் நித்திய பூசை கூட செய்ய முடியாத துர்பாக்கியமான சூழல் நிலவுகிறது. அது மிகவும் விசனமளிக்கிறது என்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் துணைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் வருந்துகிறார்.

வலிகாமம் வடக்கில் படையினர் வசம் தற்போதுள்ள நிலத்தில் 22 இற்கும் மேற்பட்ட சைவ ஆலயங்கள் நித்திய பூசையின்றி அழிவடையும் அதேநேரம் 4 பாடசாலைகளும் படையினரின் பிடியிலேயே உள்ளன.

மறுபுறத்தே காங்கேசன்துறையில் தல்செவன எனும் படையினரின் பிடியில் சிவ புண்ணியபூமியே உள்ளது. கீரிமலையில் 7 சைவ அடையாளங்களிற்கு என்ன நடந்தன என்பதனைக்கூட முழுமையாகக் கண்டறிய முடியாமல் திணறுகின்றோம்.

இந்த நிலைமையிலேயே தற்போது அபகரிக்க முயற்சிக்கப்படும் 500 ஏக்கர் நிலப் பரப்புக்குள்ளும் ஞானோதயாப் பாடசாலையுடன் துரைகட்டி வைரவர் ஆலயம், வீரபத்திரர் ஆலயம், பூதநாதர் கோயில், பிள்ளையார் ஆலயம், தணணித்தாழ்வு வைரவர் ஆலயம் என்பவற்றுடன்மயிலிட்டிபிரதேசசபையின்உபஅலுவலகம் ஒன்றும், குரும்பசிட்டி பொதுச் சந்தை என்பனவும் காணப்படுகின்றன.

எனவே இவை தொடர்பில் தமிழ் முஸ்லீம் பேதமின்றி வடக்கு கிழக்கின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் உரத்த குரல் எழுப்ப வேண்டுமென அகில இலங்கை இந்துமா மன்றத்தின் துணைத் தலைவர் ஆறு.திருமுருகன் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிதாகச் சுவீகரிக்கப்படவுள்ளதாகக் கூறப்படும் 500 ஏக்கரில் ஜே- 242, 238, 239, 240, 246 ஆகிய 5 கிராம சேவகர் பிரிவுகள் பகுதியளவிலோ அல்லது முழுமையாக இழக்கப்படும் அபாயம் உள்ளது என இந்தப் பகுதியைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வலிகாமம் வடக்குப் பிரதேச மக்களின் கவலை தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சி.சிறிதரன் ஆகியோரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

நாடாளுமன்ற அமர்வுகள் மற்றும் சர்வதேச பிரதிநிதிகளின் கவனத்துக்கு இந்த விடயம் எடுத்துச் செல்லப்படும். ஏனெனில், மயிலிட்டித் துறைமுகம் உள்பட இந்தப் பிரதேசங்களை விடவே முடியாது என மகிந்த ராஜபக்சவும் அவரது அமைச்சர்களும் கூறிவந்த நிலையில் எமது விடாமுயற்சியால் மீட்கப்பட்ட பகுதியை திருட்டுத் தனமாகவோ அல்லது கபடத்தனமாகவோ அபகரிப்பதை அனுமதிக்கவே முடியாது. தேவை ஏள்படின் நீதிமன்றையும் நாட எண்ணியுள்ளோம் என்று தெரிவித்தனர்.

இதேநேரம், வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட காணிகளில் இருந்து மீளவும் 500 ஏக்கர் பரப்பளவு காணிகளை சுவீகரிப்பதற்கு அரசு முயற்சி செய்வது மீண்டும் அந்தப் பகுதி மக்களை எத்தனை ஆண்டு காலம் அலைய வைத்து, இன்னலுக்கு உள்ளாக்கும் முயற்சி என்று வலிக்காமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் கேள்வி கேள்வி எழுப்புகின்றார்.

கடந்த 30 வருடங்களுக்கு மேல், உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்த பகுதிகள் 2018 ஆம் ஆண்டு எமது நீண்ட போராட்டங்கள், தொடர் முயற்சிகளின் பயனால் விடுவிக்கப்பட்டிருந்தன.

மக்கள் மீளக்குடியமர்ந்து தமது வாழ்வாதாரத்தைப் பகுதி பகுதியாகக் கட்டமைத்துக் கொண்டுவரும் வேளையில், மக்களுக்கு இடி விழுந்தால் போல் மீளவும் 500 ஏக்கர் காணியை அரசு சுவீகரிக்க முயற்சி செய்கின்றது.

உண்மையில் பலாலி விமான நிலைய விஸ்தரிப்பிற்காக காணிகள் சுவீகரிக்கப்படுவதாக கூறப்படுகிறது. அதனை நம்ப மக்கள் தயாராக இல்லை. இதற்கு எதிராக மீண்டும் மக்கள் போராட்டங்கள் இடம்பெறும். இதற்கு மக்கள் எதிர்ப்பை வெளியிடுவார்கள்.

காணி அளவையாளர்கள் இங்கு வந்தால் அவர்கள் அடித்து விரட்டப்படுவார்கள். இங்கு வருபவர்களை கண்டறிவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஏனைய மக்களுக்கு இதனை தெரியப்படுத்தி எதிர்ப்பில் ஈடுபடுவார்கள் என்று மேலும் தெரிவித்தார்.

# நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்குக் குறுக்குவழி எதுவும் கிடையாதாம்

## இப்படிக் கூறுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை ஒழிக்கும் யோசனை ஊடாக ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க சூழ்ச்சி செய்யப்பட்டு வருவதாக வெளியாகியுள்ள செய்தி எதிர்க்கட்சிகள் உருவாக்கிய கற்பனை கதை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு குறுகிய வழிகள் எதுவுமில்லை. அது நீண்ட செயற்பாடு எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.


ஜனாதிபதி தேர்தல் உரிய நேரத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ள ஜனாதிபதி. அந்தத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை முறையை ஒழிக்கும் யோசனையின் போர்வையில், ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்கும் சூழ்ச்சிகள் நடந்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்திருந்தார்.

இலங்கையில் நிறுவனம் ஒன்று நடத்திய கருத்துக்கணிப்பில் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளுக்கு மக்கள் மத்தியில் ஆதரவான நிலைப்பாடுகள் இல்லை எனவும் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளுக்கே மக்கள் மத்தியில் செல்வாக்கு இருப்பதாகவும் தெரியவந்துள்ளதாக செய்திகள் வெளியாகி இருந்தன.

இதன் காரணமாக அரசாங்கம், ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க முயற்சித்து வருவதாக எதிர்க்கட்சிகள் கூறி வருகின்றன.

ஆனால், அரசமைப்புச் சட்டத்திற்கு அமைய ஜனாதிபதி தேர்தல் இந்த ஆண்டு கட்டாயம் நடத்தப்பட வேண்டும்



என முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது என்பது அவரது கருத்தாக உள்ளது.

இந்த நிலையில், ஜனாதிபதி தேர்தல் இந்த ஆண்டு நடத்தப்படும் என்பதுடன் அடுத்தாண்டு பொதுத் தேர்தல் மற்றும் மாகாண சபை தேர்தல் என்பன நடத்தப்படவுள்ளன எனவும் அரசாங்கம் கூறியுள்ளது.

# யாழில் போதைப்பொருள் பாவனையால் ஒரே நாளில் இரு இளைஞர்கள் மரணம்!

யாழ்ப்பாணத்தில் அதிகரித்த போதைப்பொருள் பாவனையால் ஒரே நாளில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மல்லாகம் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞரும், தெல்லிப்பளை, கொல்லங்கலட்டி பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதில் 30 வயதான இளைஞர் போதைப்பொருள் வாங்கப் பணம் கொடுக்காததால் உயிரை மாய்த்துக் கொண்டார் எனவும், மற்றைய இளைஞர் ஹெரோயின், ஐஸ் போதைப் பொருட்களைக் கலந்து அதிகளவில் உட்கொண்டதால் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

26 வயதான இளைஞர் முதலில் ஹெரோயில் போதைப்பொருளைப் பாவித்துள்ளார் எனவும், பின்னர் ஐஸ் போதைப்பொருளைப் பாவித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மாரடைப்பு ஏற்பட்டு அவர் உயிரிழந்துள்ளர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் அவரின் வீட்டுக்கு அருகிலேயே இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ள நிலையில், கடந்த காலங்களில் பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோல், அதிகரித்த போதைப்பொருள் பாவனையால் இளைஞர்கள் உயிரிழக்கும் போக்கும் வடக்கு மாகாணத்தில் அண்மைய நாட்களில் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்; பொருளாதார வளர்ச்சி குறையும் அபாயம்!

## எச்சரித்துள்ளது மத்திய வங்கி

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது கணிக்கப்பட்ட அளவை விட குறையும் அபாயம் உள்ளது என்று இலங்கை மத்திய வங்கி எச்சரித்துள்ளது.

திறன்மிக்க இலங்கையர்கள் வெளிநாடுகளுக்குப் படையெடுப்பதால் இந்த நிலை ஏற்பட்ட வாய்ப்புள்ளது என்று மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகத் துறையில் சாதகமற்ற போக்குகள் ஏற்றுமதித் துறையின் மீட்சியையும், திறன்மிக்க இலங்கை தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு படையெடுப்பது உற்பத்தித் திறனையும் பாதிக்கிறது.

இதன் காரணமாக குறுகிய கால மற்றும் நீண்ட கால பொருளாதார வளர்ச்சி குறையும் அபாயம் உள்ளது.

தற்போது கணிக்கப்பட்டுள்ளபடி, குறுகிய காலத்துக்குப் பொருளாதார வளர்ச்சி மெதுவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் பொருளாதாரம் படிப்படியாக அதிக வளர்ச்சி நிலைக்கு வரும் .– என்றுள்ளது.



# பிரித்தானிய தீவுப் பிரதேசத்தில் இலங்கையர்கள் தங்கவைப்பு!

## பாதுகாப்பற்று உள்ளனர் என்று அச்சப்படுகின்றனர்

தனிமைப்படுத்தப்பட்ட பிரித்தானிய தீவுப் பிரதேசத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள், தாங்கள் பாதுகாப்பற்றவர்களாகவும் மறக்கப்பட்டவர்களாகவும் மாற்றப்பட்டுள்ளனர் என்று உணர்கின்றனர் எனத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் பெரும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் அகதிகள் அமைப்பைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இந்தியப் பெருங்கடலில் உள்ள டியாகோ கார்சியாவுக்கு அகதிகளின் நலன்களை பார்வையிடச் சென்றுள்ளனர்.

இதன்போது அங்குள்ள நிலைமைகள் பற்றியும் அந்தப் புகலிடக் கோரிக்கையாளர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளதையும் அவர்கள் தன்னிச்சையாக அவதானித்துள்ளனர்.

அங்கு பாலியல் வன்கொடுமைகள், குழந்தைகளைத் துன்புறுத்துதல் மற்றும் சுய தீங்கு மற்றும் தற்கொலை முயற்சிகள் என்பன இடம்பெறுகின்றன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவை தொடர்பில் அந்தப் புகலிடக் கோரிக்கையாளர்கள் ஐக்கிய நாடுகளின் விசாரணையாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

இந்திய பெருங்கடலில் அமைந்துள்ள இந்த டியாகோ கார்சியா தீவானது, பிரித்தானியா - அமெரிக்க இராணுவத் தளமாகப் பயன்படுத்தப்பட்டது. இது தற்போது இந்தப் தீவு புகலிடக் கோரிக்கையாளர்களின் முகாமாக விளங்குகிறது.

இந்த முகாமில் உள்ள 61 பேரில் பெரும்பான்மையோர் இலங்கைத் தமிழர்களாவே உள்ளனர்.

அவர்கள் 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் டியாகோ கார்சியாவில் தரையிறங்கி கனடாவுக்குச் செல்ல முயன்றபோது அவர்களின் படகு சிக்கல் அடைந்தமையால் இந்தத் தீவில் தடுத்து வைக்க வேண்டிய நிலைக்கு ஆளாகினர்.

இந்த நிலையில், இது அரசியலமைப்பு ரீதியாக வேறுபட்டது எனவும் ஐக்கிய நாடுகளின் அகதிகள் சாசனத்துக்குப் பொருந்தாது எனவும் பிரித்தானிய அரசு வாதிட்டு வருகிறது.

இந்த நிலையில் அகதிகளைக் குடியேற்ற பொருத்தமான மூன்றாவது நாடு ஒன்றை எதிர்பார்த்துள்ளார் என்று பிரித்தானிய வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# ஐஸ் போதைப்பொருளுடன் வவுனியாவில் ஒருவர் கைது

(வசந்தன்)

வவுனியா, தம்பனைச்சோலை பகுதியில் ஐஸ் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த நபர் ஒருவரை வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் போதைத் தடுப்புப் பிரிவு பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

அந்தப் பகுதியில் போதைப்பொருள் விற்பனை இடம்பெறுகின்றது என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து வவுனியா தலைமை பொலிஸ் அதிகாரியின் வழிகாட்டலில் வவுனியா மது ஒழிப்பு பொலிஸ் பிரிவின் நிலையப்



பொறுப்பு அதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிஸ்வி தலைமையில் பொலிஸ் சார்ஜன்களான கீர்த்தி ரத்தின, சொய்சா, டிசாநாயக்க, பொலிஸ் கொஸ்தாபர்களான குமார, விதுசன் ஆகியோரால் தம்பனைச்சோலை பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் விசேட சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், அதனை உடமையில் வைத்திருந்த நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# ஈரானின் வெளிவிவகார அமைச்சர் இன்று இலங்கைக்கு வருகிறார்!

ஈரானின் வெளிவிவகார அமைச்சர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹெய்ன் இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இஸ்ரேலிய போக்குவரத்து அமைச்சர் மிரி ரெகெவ் கொழும்புக்கு விஜயம் செய்த சில நாள்களே ஆகியுள்ள நிலையிலேயே இவரது வருகை இடம்பெறவுள்ளது.

இவரது இரண்டு நாள் விஜயத்தை முன்னிட்டு ஈரானிய கடற்படையின் இரண்டு கப்பல்கள் முறையான அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சு இது ஒரு நல்லெண்ண விஜயம் என்று குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் தெஹ்ரானுக்கு விஜயம் செய்திருந்த இலங்கை வெளியுறவு அமைச்சரின் அழைப்பின் பேரில் அமீர் அப்துல்லாஹெய்ன் இலங்கை வருகை தரவுள்ளார்.

இதன்போது அவர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்தன மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்டோருடன் விஷேட சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

ஈரானிய ஆதரவு ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா படைகள் காசா மற்றும் லெபனானில் இஸ்ரேலிய படைகளுடன் ஈடுபட்டுள்ளன.

அதே நேரத்தில் யெமனின் ஈரானிய ஆதரவு ஹவுதி குழு செங்கடலில் இஸ்ரேலுடன் இணைக்கப்பட்ட கப்பல்களைத் தாக்கி, காசாவில் போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்து வருகிறது.

இந்த நிலையில் செங்கடலில் சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதை இலங்கை எதிர்க்கிறது.

அத்துடன், செங்கடலில் வர்த்தகக் கப்பல்களைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கா தலைமையிலான ரோந்துப் படையினருடன் இணைய போவதாக முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும், இலங்கை இன்னும் கடற்படைக் கப்பலை செங்கடலுக்கு அனுப்பவில்லை.

இந்த சூழ்நிலையிலேயே ஈரானிய வெளியுறவு அமைச்சரின் இலங்கை பயணம் இடம்பெறவிருக்கின்றது.

அவர், ஜனாதிபதியுடன் நடத்தவிருக்கும் பேச்சின் நிகழ்ச்சி நிரலில் காசாவில் நிலவும் மோதல்கள் தொடர்பான விடயங்கள் உள்ளடங்கியிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# கில்மிஷாவுக்கு வடமராட்சியில் நேற்றுக் கௌரவிப்பு நிகழ்வு!

கில்மிஷாவை கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று யாழ்ப்பாணம், வடமராட்சி அல்வாயில் நேற்று (18) வட அல்வை இளங்கோ சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது.

இதன்போது அல்வாய் வடக்கு நாவலடி சந்தியில் இருந்து கில்மிஷா வாகனத்தில் நிகழ்வு மைதானம்வரை அழைத்துச் செல்லப்பட்டார். இதன்போது மன்னார் மாவட்ட செயலாளர் கனகேஸ்வரனால் கில்மிஷாவுக்கு “கான வாணி” என்ற பட்டமும் வழங்கப்பட்டது.





# ராஃபாவில் தரைவழிப் போருக்கு தெளிவாகத் திட்டமிடும் இஸ்ரேல்!

## அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதில்லையென்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவிப்பு





ராஃபாவில் தரைவழி போர் நடவடிக்கைகளை மேற்கொள்ள இஸ்ரேல் தெளிவாக திட்டமிட்டு வருகிறது என்று இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளார்.

காசாவின் ராஃபா தாக்குதலை முன்னெடுக்கும் திட்டத்தை கைவிட உலக தலைவர்கள் பலர் இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுத்துவரம் நிலையிலும் இதில் மாற்றம் இல்லை என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஜெருசலேமில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது பேசிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது,

ராஃபா தாக்குதல் திட்டத்தை கைவிடுவது, ஹமாஸுக்கு எதிரான போரில் தோற்பதற்கு சமமானது. எவ்வித அழுத்தத்துக்கும் அடிபணிய மாட்டோம். முழு வெற்றி கிட்டும்வரை இஸ்ரேல் சண்டையிடும்.

அமெரிக்காவுடன் இணைந்து இஸ்ரேல் செயற்பட்டு வருகிறது. அமெரிக்காவின் ஆதரவுக்கு நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

இஸ்ரேல் பிணைக் கைதிகள் 134 பேர் ராஃபாவில் அடைத்துவைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும் நிலையில், ஹமாஸ் அமைப்பின் தலைவர்களும் அங்கு தஞ்சமடைந்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளையில், ராஃபாவில் உள்ள பொது மக்கள் அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேறிய பின்னரே, இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்களை தொடங்கும்.- என்று தெரிவித்துள்ளார்.

# வங்குரோத்து நிலைமையில் மாலைதீவின் பொருளாதாரம்!

## சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியுள்ளது என்றும் தகவல்



இந்தியாவுடன் மோதல் போக்கால் மாலைதீவின் பொருளாதாரம் வக்குரோந்து நிலைக்குச் சென்றுள்ளது என்றும் இதனால் அந்த நாடு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியுள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவின் அண்டை நாடாக மாலைதீவு உள்ளது. தீவு தேசமான இந்த நாட்டின் வருமானம் என்பது சுற்றுலாத்துறையைச் சார்ந்தே இருக்கிறது.

மாலைதீவில் உள்ள கடற்கரைக்கு இந்தியா உள்பட பிற நாடுகளில் இருந்து ஆண்டுதோறும் அதிகமான சுற்றுலா பயணிகள் சென்று வருகின்றனர். குறிப்பாக இந்தியாவில் இருந்து அதிகமான சுற்றுலா பயணிகள் மாலைதீவுக்கு சுற்றுலாக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தகைய சூழலில் கடந்த ஆண்டு முதல் இந்தியா - மாலைதீவு இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது.

அதாவது மாலைதீவில் கடந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் இந்திய ஆதரவு அதிபராக இருந்த இப்ராஹிம் முகமது சோலி தோல்வியடைந்தார். அவரை பி.என்.பி. கட்சியை சேர்ந்த முகமது முய்ஸு வீழ்த்தி வெற்றி பெற்று ஜனாதிபதியானார்.

முகமது முய்ஸு இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டதோடு சீனா ஆதரவாளராகவும் இருந்து வந்தார்.

இவர் தனது தேர்தல் பிரசாரத்தில், தான் வென்றால் மாலைதீவில் உள்ள இந்திய இராணுவ வீரர்களை வெளியேற்றுவேன் என்று கூறி பிரசாரம் செய்து வாகை சூடினார்.

அதேபோல் வெற்றி பெற்ற அவர் அங்குள்ள இந்திய இராணுவ வீரர்களை வெளியேறும்படி கூறினார். இது விவாதத்தைக் கிளப்பி உள்ளது.

இத்தகைய சூழலில் பிரதமர் மோடி சமீபத்தில் லட்சதீவுக்கு சென்று புகைப்படம் வெளியிட்டார்.

மாலைதீவின் சுற்றுலா துறையை முடக்கும் வகையில் உள்நோக்கத்துடன் லட்சத்தீவை பிரதமர் மோடி ஆதரிக்கிறார்என அந்த நாட்டு அமைச்சர்கள் கூறியமையோடு இந்தியா குறித்து சர்ச்சைக் கருத்துகளையும் தெரிவித்தனர்.

இது இந்தியா-மாலைதீவு இடையேயான பிரச்சினையை இன்னும் அதிகப்படுத்தியது. இதனால் கடும் கோபமடைந்த இந்தியர்கள் மாலைதீவு செல்வதற்கான டிக்கெட்டுகளை இரத்துச் செய்தனர்.

இதனால் மாலைதீவின் வருமானம் சடுதியாக வீழ்ச்சியடைந்தது. இந்த நிலையில் தற்போது மாலைதீவு வங்குரோத்து நிலையில் உள்ளது என்று அறிவித்துள்ளது.

அதாவது தங்கள் நாட்டை மீட்கப் பொருளாதார ரீதியிலான கடன் உதவிகளை வழங்கும் படி மாலைதீவு சர்வதேச நாணய நிதியத்திடம் கேட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

# இஸ்ரேல் - பாலஸ்தீனம் இரண்டையும் தனி நாடுகளாக அங்கீகரிப்பதே தீர்வு!

**இதில் இந்தியா உறுதி என்கிறார் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர்**



இஸ்ரேல் – பாலஸ்தீன பிரச்சினைக்கு இரண்டையும் தனித்தனி நாடுகளாக அங்கீகரிப்பதே தீர்வு என்பதில் இந்தியா உறுதி. ஆதரவு அளிக்கும் நாடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனி தலைநகர் முனிச்சில் சர்வதேச பாதுகாப்பு மாநாடு நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளை சேர்ந்த தலைவர்கள், அமைச்சர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தியா சார்பில் இந்த மாநாட்டில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் பங்கேற்றுள்ளார். அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, இலங்கை, கனடா உள்பட பல்வேறு நாடுகளில் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த நிலையில், இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக கனடா வெளியுறவுத்துறை அமைச்சர் மெலனி ஜ்லியை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சனிக்கிழமை இரவு சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது இரு நாட்டு உறவு உள்பட முக்கிய விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டன.

இந்தியா – கனடா இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக ஐரோப்பிய நாடுகளான போலந்து, பெல்ஜியம் மற்றும் போர்ச்சுகல் நாடுகளை சேர்ந்த சக அமைச்சர்களை சந்தித்து பேசினார்.

இதில், போர்ச்சுகல் வெளியுறவு அமைச்சர் ஜோவாவோ கிராவினோவுடனான சந்திப்பில், சமீபத்திய உலகளாவிய வளர்ச்சிகளை பற்றிய பார்வைகளை அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

இதேபோன்று, போலந்து வெளியுறவு அமைச்சர் ரேடோஸ்லா சிகோர்ஸ்கி உடனான சந்திப்பில், இரு நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பு பற்றி இருவரும் விவாதித்தனர். இதில், உக்ரைன் போர் பற்றியும்



ஆழ்ந்த ஆலோசனை நடத்தப்பட்டது.

பெல்ஜியம் வெளியுறவு அமைச்சர் ஹத்ஜா லாபீப் உடனான சந்திப்பில், இந்தியா மற்றும் பெல்ஜியம் இடையேயான இரு தரப்பு உறவுகளில் காணப்படும் முன்னேற்றம் பற்றி ஆலோசிக்கப்பட்டது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் அந்தோணி பிளிங்கன் ஆகியோர் ஜேர்மனியில் சந்தித்து பேசினர். இந்தச் சந்திப்பில் செங்கடலில் கடல்சார் பாதுகாப்புக்கான அமெரிக்கா மற்றும் இந்தியாவின் அணுகுமுறைகள் பரஸ்பரம் வலுப்படுத்துவதாகவும், பிராந்தியத்தில் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிப்பதாகவும் பிளிங்கன் கூறியிருக்கிறார்.

மேலும், செங்கடலில் சுதந்திரமான பயணத்தை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மத்திய கிழக்கு பகுதியில் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தற்போதைய பணிகள் குறித்தும் விவாதித்தனர்.

இந்த விவரங்களை மத்திய வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவருடைய எக்ஸ் சமூக வலைதளத்தில் இது தொடர்பில் பகிர்ந்துள்ளார்.

உலகில் காணப்படும் பாதுகாப்பு சவால்களை பற்றி உயர்மட்ட அளவிலான விவாதங்களை நடத்துவதற்கான ஒரு தனித்துவ வாய்ப்பை இந்த மாநாடு வழங்குகிறது.

ஜேர்மனியின் மியுனிக் நகரில் நடைபெற்று வரும் சார்வதேச பாதுகாப்பு மாநாட்டில் அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்ததாவது,

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலில் ஹமாஸ் படையினர் மேற்கொண்டது பயங்கரவாதத் தாக்குதலாகும். அதற்கு எதிர் வினையாற்றும் இஸ்ரேல், காஸாவில் பொது மக்கள் உயிரிழப்பதை நினைவில் கொண்டிருக்க வேண்டும்.

சார்வதேச மனிதநேய சட்டத்தை பின்பற்ற வேண்டிய கடமை இஸ்ரேலுக்கு உள்ளது. இஸ்ரேல்–பாலஸ்தீன பிரச்சினைக்கு இரண்டையும் தனித்தனி நாடுகளாக அங்கீகரிப்பதே தீர்வு என்பதை பல ஆண்டுகளாக இந்தியா நம்பி வருகிறது.

அந்தத் தீர்வை உடனடியாகக் காண வேண்டும் என்று கருதும் நாடுகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது .– என்றார்.

இந்த நிகழ்ச்சியில் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆன்டனி பிளிங்கன், இலங்கை வெளியுறவு துறை அமைச்சர் அலி சப்ரி, ஜேர்மனி வெளியுறவுத் துறை அமைச்சர் அன்னாலீனா பேர்பாக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# விவசாயிகளுக்குத் துரோகம் செய்யும் அரசாகத் தி.மு.க.!

## அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி குற்றச்சாட்டு

விவசாயிகளுக்கு துரோகம் இழைக்கும் அரசாக தி.மு.க. அரசு உள்ளது என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான பழனிசாமி கூறியுள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் பல்வேறு அரசியல் கட்சிகளிலிருந்து ஆயிரக் கணக்கானோர் அ.தி.மு.கவில் இன்று இணைந்தனர்.

இதில் புதிதாக கட்சியில் இணைந்தோரை வரவேற்று, கௌரவித்த பின்னர் பழனிசாமி உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், வாக்குகளை நோக்கமாக கொள்ளாமல், மக்களின் நலன் கருதி, மயிலாடுதுறை உள்ளிட்ட 6 மாவட்டங்கள் புதிதாக உருவாக்கப்பட்டன. சீர்காழியை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் கோட்டம் உருவாக்கப்பட்டது. டெல்டா மாவட்டங்கள் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டது.

மீதேன் திட்டம் வருவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர் இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின். ஆனால் அதைத் தடுத்து நிறுத்தியது அ.தி.மு.க. அரசு.

டெல்டா மாவட்டங்களில் பல ஆண்டுகளாக தூர் வாரப்படாமல் இருந்த நீர் நிலைகளை தூர்வாரும் வகையில் குடிமராமத்து திட்டம் என்ற சிறப்பான திட்டத்தை அ.தி.மு.க. அரசு செயல்படுத்தியது. தூர் வாரிய மண்ணை விவசாயிகளே பயன்படுத்திக் கொண்டனர்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் அதிகபட்சமாக விவசாயிகளுக்குப் பயிர்க்காப்பீடு இழப்பீட்டுத் தொகை பெற்றுத்தரப்பட்டது. நாட்டிலேயே அதிகபட்சமாக 50 லட்சம் விவசாயிகளுக்கு 9,400 கோடி ரூபா இழப்பீட்டுத் தொகை பெற்றுத்தரப்பட்டது.

குறுவை சாகுபடிக்காக முதல்வர் ஜூன் 12 ஆம் திகதி தண்ணீர் திறந்து வைத்தார். ஆனால் கர்நாடகத்திலிருந்து தண்ணீரை தொடர்ந்து பெற முடியாமல், 3.5 லட்சம் ஏக்கர் பயிர்கள் நீரின்றிப் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு காப்பீட்டுத் தொகை பெற்றுத்தர முதல்வர் தவறிவிட்டார். காப்பீடு இழப்பீட்டுத் தொகை பெற்றிருந்தால் ஹெக்டேருக்கு 84 ஆயிரம் ரூபா கிடைத்திருக்கும். விவசாயிகளுக்கு துரோகம் இழைக்கும் அரசாக தி.மு.க. அரசு உள்ளது. பிரதமர் வீடுகட்டும் திட்டத்தை மத்திய அரசு கைவிட்டுவிட்டது. மாநில அரசின் வீடுகட்டும் திட்டமும் கைவிடப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. கொண்டு வந்த பள்ளி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டமும் கைவிடப்பட்டது. நலத் திட்டங்களை எல்லாம் கைவிடுவதுதான் தி.மு.க. அரசின் சாதனையாக உள்ளது.

3 ஆண்டுகளில் எந்தவொரு மக்கள் நலத்திட்டத்தையும் தி.மு.க. அரசு கொண்டுவரவில்லை.- என்றார்.

# தமிழக மீனவர்கள் கைது விவகாரம்; பிரதமர் மோடி தலையிட வேண்டும்!

## முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்து

தமிழக மீனவர்கள் கைது விவகாரத்தில், பிரதமர் நரேந்திர மோடி ராஜதந்திர ரீதியாக தலையிட வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்வதை கண்டித்தும், படகுகளை இலங்கை அரசு நாட்டுடமையாக்குவதை கண்டித்தும் ராமேஸ்வரத்தில் படகுகளில் கறுப்புக் கொடியை கட்டி 700 இற்கும் மேற்பட்ட மீனவரகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்ப தாவது,

தமிழக மீனவர்கள் கைது விவகாரத்தில், பிரதமர் நரேந்திர மோடி ராஜதந்திர ரீதியாக தலையிட வேண்டும். 3 மீனவர்கள் அநியாயமாக நீண்ட காலம் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு மாதங்களில், 69 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். படகுகள் இலங்கை அரசால் தேசியமயமாக்கப்பட்டுள்ளன.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து கைது செய்வது கவலை அளிக்கிறது. தமிழக மீனவர்கள் விடுவிக்கப்படுவதை பிரதமர் நரேந்திர மோடி, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் உறுதி செய்ய வேண்டும். மீனவர்களின் நலனை பாதுகாக்க மத்திய அரசு உறு தியான நடவடிக்கை எடுப்பது முக்கியம். ஏனென்றால் அவர்கள் தமிழர்கள் மட்டுமல்ல, பெருமைமிக்க இந்தியர்கள்.- என்றுள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் - 19.02.2024




இன்று அற்புதமான பலன்கள்கிடைக்கும்.உங்கள் இலக்குகளை முடிப்பதற்கு போதிய அவகாசம் கிடைக்கும்.உங்கள் முகம் பிரகாசமாக இருக்கும்.நீங்கள் பல ஆச்சரியங்களைக் காணலாம்.

பணியிடத்தில் உங்கள் திறமை பாராட்டப்படும். புதிய வேலை வாய்ப்புகளும் கிடைக்கும்.அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் துணையின் மீது அதிக ஆர்வம் காட்டுவீர்கள். உங்கள் துணையின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரை இன்று அதிர்ஷ்டம் காணப்படும். பண விஷயத்தில் உங்கள் தரத்தை இன்று மேம்படுத்த முடியும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றலும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று சிறிது பதற்றத்துடன் காணப்படுவீர்கள். நீங்கள் எதையும் சகஜமாக எடுத்துக் கொண்டு சிறிது அனுசரித்து நடந்தால் அனைத்தும்சிறப்பாக இருக்கும்.முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிரக்கவும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. உங்கள் சகபணியாளர்களுடன் சூடான விவாதம் காணப்படும். பணிகளின் சுமை அதிகரித்துக் கொண்டேயிருக்கும்.

உங்கள் இருவருக்கும் இடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். எனவே உங்கள் துணையுடன் ஒரு விவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

இன்று உங்களின் அஜாக்கிரதை மற்றும் கவனக் குறைவு காரணமாக பண இழப்புகளை சந்திப்பீர்கள்.

செரிமானக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் உணவில் கவனம் செலுத்த வேண்டும்.




உங்கள் பதற்றத்தை எப்படி குறைப்பதென்பதை கற்றுக்கொள்ளுங்கள். எந்தவிதமான எதிர்மறை எண்ணத்துக்கும் இடம் கொடுக்காதீர்கள். நீங்கள் அற்புதங்களைப் புரிவீர்கள் என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள்பணிகளைநம்பிக்கையுடன்மேற்கொள்வீர்கள். தடைகளை சமாளித்து உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் வித்தியாசமான அணுகுமுறையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உங்கள் இருவருக்கும் இடையேயான உறவை பாதிக்கும். நன்கு புரிந்து கொள்வதன் மூலம் நன்மை கிடைக்கும்.

இன்று அதிகரித்து காணப்படும் பொறுப்புகள் காரணமாக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாவீர்கள்.இன்று அதிக பணம் சேமிக்க இயலாது.




பதற்றம் காரணமாகச் சில சௌகரிங்களை இழப்பீர்கள். உங்களை சகஜமாக வைத்திருக்க இசையைக் கேளுங்கள் அல்லது திரைப்படம் போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளைப் பாருங்கள். அது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை முடிக்க உங்களுக்கு அளிக்கப்பட்ட நேரம் போதாது என்று நீங்கள் நினைப்பீர்கள். திட்டமிடுவதன் மூலம் சிறிது எளிதாக பணிகளை முடிக்கலாம்.

உங்கள் மனதில் தேவையற்ற எண்ணங்கள் காணப்படும். இதை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் மகிழ்ச்சி குறையும்.

இன்று உங்களிடம் குறைந்த அளவு பணமே காணப்படும். உங்கள் குடும்பத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும்.




விஷயங்கள் அனைத்தும் சுமுகமாக நடக்கும் உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து இருப்பதன் காரணமாக உங்கள் வளர்ச்சி சாத்தியப்படும். இன்றைய நாளை நீங்கள் மகிழ்ச்சியுடன் அனுபவிப்பீர்கள்.

இன்று மகிழ்ச்சியான நாளாக இருக்கும். இன்று ஊக்கத் தொகையும் சலுகையும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பணியைப் பொறுத்தவரை இன்று மகிழ்ச்சியான நாளாக இருக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பழகுவீர்கள். அவரிடம் நேர்மையாக இருப்பீர்கள். குடும்ப முன்னேற்றம் குறித்த பயனுள்ள விவாதம் நடக்கும்.

இன்று உங்களுக்கு அதிர்ஷ்டமான நாள். இன்று உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.




உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும் வகையில் பணிகளை நீங்கள் மேறகொள்ளலாம்.முக்கியமான முடிவுகள் இன்று நல்ல பலன்களைத் தரும்.நீங்கள் நம்பிக்கையுடன் இருப்பீர்கள். உங்களிடம் நகைச்சுவை உணர்வு காணப்படும். உங்களுக்குப் பிரியமானவர்கள் உங்களின் இந்த குணங்களைப் பாராட்டுவார்கள்.

குறைந்த நேரத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். இது உங்கள் சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்களுக்கென தனிப்பாணி அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் திறமைகளைக் கொண்டு பணியை எளிதில் முடிப்பீர்கள்.உங்கள் துணையிடம் காதல் உணர்வை வெளிப்படுத்து வீர்கள். உங்களின் மகிழ்ச்சியான மனநிலையை அவர் தெளிவாகப் புரிந்துகொள்வார்.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். அமைதியுடனும் பொறுமையுடனும் இருக்க வேண்டும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இல்லை. உங்கள் முயற்சி தான் உங்களுக்கு புகழை பெற்றுத் தரும்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் ஒப்புக் கொண்ட வேலைகளை குறித்த நேரத்தில் முடிப்பதற்கு இன்றைய நாளை திட்டமிடுங்கள்.

உங்களிடம் நுண் உணர்வு மேலோங்கி காணப்படும். எனவே உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்க்கவும்.

உங்களிடம் குறைவான பணமே காணப்படும். பணப் புழக்கம் குறைந்து காணப்படும். பொறுப்புகள் அதிகமாக இருக்கும். உங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு இன்றைய நாளை புத்திசாலித்தனத்துடன் கையாள வேண்டும்.




இன்று பதற்றம் ஏற்பட வாய்ப்புள்ளதால் அமைதியாக இருக்க வேண்டும். சிறந்த இசை கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும். உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. உங்கள் சக பணியாளர்களுடன் அல்லது உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் நல்லுறவு காணப்படாது.

இன்று மனக் குழப்பம் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். மகிழ்ச்சியாக இருக்க இந்தப் போக்கை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இன்று உகந்த நாள் அல்ல. நிதி வளர்ச்சியில் இன்று சில கட்டுப்பாடுகளை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.02.2024

## தனுசு

இன்று சற்று மந்தமான நாளாக காணப்படும். உங்கள் செயல்களை புத்திசாலித்தனமாக செய்ய வேண்டும். இன்று உங்கள் செயல்களில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது.

இன்று பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். கட்டுப்பாடற்ற சூழல் காரணமாக பணியில் மிகப் பெரிய தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

துணையுடன் தேவையற்ற வாக்குவாதங்கள் எழலாம். அதனை தவிர்க்க அவேண்டும். மகிழ்ச்சியைக் காண அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று தேவையற்ற செலவுகளை சமாளிக்க நேரும். இதனால் கவலை ஏற்படும். பண இழப்பு ஏற்படவும் வாய்ப்புள்ளது.

## கும்பம்

புதிய தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்வதற்கு இன்று உகந்த நாள். உங்கள் முயற்சிகள் அனைத்தும் இன்று பலிக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். உங்கள் பணிகள் அனைத்தையும் எளிதில் ஆற்றுவீர்கள்.

பணியிடத்தில் சிறப்பாக பணியாற்றி நற்பெயரை எடுப்பீர்கள். உங்கள் புதுமையான கருத்துக்கள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். துணையுடனான உறவை ஒரு புதிய நிலைக்கு மாற்றுவீர்கள்.

இன்று கணிசமான தொகை சம்பாதிப்பீர்கள். இன்று பணம் சேமிப்பதற்கான அதிர்ஷ்டம் உள்ளது.

இன்று ஆற்றலுடனும் தைரியத்துடனும் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

## மகரம்

வெவ்வேறு விஷயங்களில் உங்களிடம் சமநிலையான கருத்து காணப்படும்.உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும்.அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.முக்கியமான முடிவுகள்எடுப்பதற்கு இன்று உகந்த நாள்.

உங்கள் பணிகளை சுமுகமாக செய்து முடிப்பீர்கள். கடினமான பணிகளைக் கூட இன்று எளிதாகவும் விரைவாகவும் செய்து முடிப்பீர்கள்.

இன்று உங்களிடம் இனிமையான உணர்வு காணப்படும். நேர்மறையான எண்ணம் காணப்படும். எனவே உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துங்கள்.

## மீனம்

சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் தினசரி செயல்களை செய்வதை கடினமாக உணர்வீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளவும். அமைதியாக இருக்கவும்.

உங்கள் பணியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இன்று முன்னுரிமைப் படி பணிகளை அமைத்து செயல்படுவது அவசியம்.

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் துணையை புரிந்துகொள்வது உங்களுக்கு கடினமாக இருக்கும். குழப்பத்தை விட்டுத் தெளிவான மனதுடன் பேசுவதன் மூலம் இருவருக்கும் இடையே நல்லுறவு ஏற்படும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்க இயலாது. இன்று பணத் தேவைகள் அதிகமாக இருக்கும்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thamilan Group Chairman

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# நாட்டின் முக்கிய கேந்திர இடங்கள் அனைத்தையும் இந்தியாவுக்குத் தாரைவார்க்கப் போகின்றார்களாம்!

## எட்கா உடன்படிக்கை அடுத்த மாதம் என்கிறார் விமல் வீரவன்ஸ

நாட்டின் கேந்திர முக்கியத்துவமான அனைத்து இடங்களையும் இந்தியாவுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளனர் எனவும், எதிர்வரும் மார்ச் மாதம் எட்கா உடன்படிகை கைச்சாத்திடப்பட உள்ளது எனவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ வெளியிட்டிருந்த கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் அவர் இன்று நேற்று ஊடகங்களிடம் இதனை கூறியுள்ளார்.

இலங்கையின் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இந்தியாவில் வைத்து, இலங்கையை இந்தியாவின் ஒரு பகுதியெனப் பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

இது சாதாரணமான கருத்து அல்ல. ஒரு நாட்டின் அமைச்சர் இன்னுமொரு நாட்டுக்கு சென்று தனது நாடு அந்த நாட்டின் பகுதி எனக்கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியுமா? இது பாரதூரமான விடயம்.



நாடாளுமன்றத்தில் உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்யும் போது, நாட்டின் இறையாண்மை மற்றும் ஐக்கியத்தை பாதுகாப்பதாக நாங்கள் உறுதியேற்கின்றோம்.

அந்த உறுதிப்பாட்டை மீறும் உரிமை அமைச்சருக்கோ, நாடாளுமன்ற உறுப்பினருக்கோ கிடையாது.

ஹறின் பெர்னாண்டோவின் வாயில் இந்த வார்த்தை வந்தது வெறுமனே அல்ல. அடுத்து என்ன நடக்க போகிறது என்பதை அவர் அறிந்திருக்கின்றார். மார்ச் மாதம் எட்கா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட உள்ளது.

இதன் பின்னர் சேவை பொருளாதாரம், தொழில்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக் இந்தியர்கள் எந்த தடையுமின்றி இலங்கைக்கு வர முடியும்.

அடுத்து குழாய் மூலமான இந்தியாவின் எரிசக்தியை நம்பியிருக்கும் போது, அந்த நாடு அதனை தீர்மானிக்கும் போது, நாம் இந்தியாவை சார்ந்திருக்க நேரிடும்.

எமது துறைமுகங்கள், விமான நிலைங்கள், டெலிகொம் போன்ற பொருளாதார கேந்திர நிலையங்கள், மின்சார சபை என அனைத்தும் இந்திய நிறுவனங்களின் கைகளுக்கு சென்றதும் என்ன நடக்கும் என்பது ஹறின் பெர்னாண்டோவுக்கு தெரியும். இதன் பின்னர் இலங்கையை இந்தியாவின் ஒரு பகுதியாக அவர்கள் மாற்றுவார்கள்.

நாட்டின் ஜனாதிபதி, ஹறின் பெர்னாண்டோவின் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கிறாரா இல்லையா என்பதை நாட்டுக்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார்.



# மரக்கறிகளின் விலை மலையகத்தில் வீழ்ச்சி

## கரட் ஒரு கிலோ ரூபா 360

(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியாவில் 2,000 ரூபாவுக்கு அதிகமாக காணப்பட்ட ஒரு கிலோ கரட்டின் விலை நேற்று 360 ரூபாவாக குறைந்துள்ளது.

நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ கரட்டின் மொத்த விலை 360 ரூபாவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. மரக்கறி வகைகளின் விலை அதிகரிப்பு காரணமாக நுகர்வோர் கொள்வனவு இன்னும் வழமைக்கு திரும்பவில்லை. அத்துடன் கரட் உற்பத்தி அதிகரித்து சந்தையில் வரத்து அதிகமாக காணப்பட்டதன் காரணமாக கரட்டின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

நுவரெலியா மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் நிலவும் சிறந்த காலநிலை காரணமாக மலையகத்தில் மரக்கறி உற்பத்தி முன்பை போன்று நன்கு கிடைப்பதாகவும், ஏறக்குறைய அனைத்து மலையக மரக்கறி வகைகளின் விலைகளும் குறைந்துள்ளன எனவும் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# முல்லைத்தீவுக் காணிகளில் இருந்து வெளியேறி வருகின்றது இராணுவம்!

## வனவளத் திணைக்களத்திடம் காணிகள் ஒப்படைப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தினர் பல காணிகளில் முகாம்களை அமைத்துத் தங்கியிருந்த நிலையில், தற்போது அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

அவ்வாறு இராணுவத்தினர் வெளியேறிச் செல்லும்போது, தாம் முகாம் அமைத்திருந்த காணிகளை வனவளத் திணைக்களத்திடம் கையளித்துவிட்டு வெளியே சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு வனவளத் திணைக்களத்திடம் இராணுவத்தினர் கையளித்த காணிகள், அபிவிருத்தி வேலைகளுக்காகவோ அல்லது, ஏனைய முக்கிய தேவைகளுக்காகவோ தேவைப்பட்டால், தேவைகளைச் சுட்டிக்காட்டி வனவளத் திணைக்களத்திடம் இருந்து காணிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமாம கேஸ்வரன் தகவல் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பங்கேற்றிருந்த விசேட கூட்டம் ஒன்றிலேயே இந்த விடயம் தொடர்பில் இணக்கம் காணப்பட்டது என்றும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

இராணுவத்தினர் பல அரச காணிகளிலிருந்து வெளியேறியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் இராணுவத்தினர் வெளியேறியுள்ள காணி விவரங்கள் தொடர்பில் மாவட்ட செயலகத்தாலோ வனவளத்திணைக்களத்தாலோ எந்த ஒரு புள்ளி விவரங்களும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கடற்றொழிலாளர்களின் அத்துமீறலை எதிர்த்து முற்றுகையாகவுள்ள இந்திய துணைத் தூதரகம்!

## யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர்கள் அறிவிப்பு!!
## நாளை செவ்வாய்க்கிழமை நடத்தவும் ஏற்பாடு!!!

இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தை முற்றுகையிடப் போகின்றனர் என்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுவிக்க வேண்டும் எனக் கோரித் தமிழகத்தின் இராமேஸ்வரத்தில் போராட்டம் நடத்தப்படுகிறது. எங்கள் வயிற்றில் அடித்து வயிற்றுப் பிழைப்புக்காக வந்தோம் என்று இந்திய கடற்றொழிலாளர்கள் கூறுவது தவறு.

இந்திய அரசு கடல் எல்லையில் நின்று அத்துமீறுபவர்களைத் தடுத்தால் இந்தப் பிரச்சினை ஏற்படாது. தமிழ் நாடு கடற்றொழிலாளர்கள் அயல் மாநிலங்களுக்கு சென்றால் இந்திய சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள். இந்த அச்சத்தால் தொப்புள் கொடி உறவு என கூறி இங்கு அத்துமீறி வந்து தொழில் செய்கிறார்கள்.

சில நாள்களாக மயிலிட்டி பகுதியில் தொடர்ச்சியாக இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது.

எங்களுடைய எல்லைக்குள் உள்நுழைவதை நாங்கள் எப்போதும் அனுமதிக்க மாட்டோம். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எங்களுக்கு வாழ்வாதாரம் கடலை நம்பியே உள்ளது.



இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நபர்களுக்கு தெரியப்படுத்தியும் எந்தப் பயனுமில்லை. இனியும் இந்த றோலர் படகுகளை நிறுத்தாவிட்டால் நாங்களே சென்று றோலர் படகுகளை எரிக்க நேரிடும்.

எனவே இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் எங்களது போராட்டம் வெடிக்கும்.

அரசை நாங்கள் நம்புவதற்கு தயாராக இல்லை. காரணம் அவர்கள் எங்களையும் கைது செய்யத் தயங்க மாட்டார்கள்.

எனவே இதற்கு ஒரு முடிவு இல்லாதபட்சத்தில் நாங்கள் எங்களது முற்றுகையை முன்னெடுப்போம்.

நாளை செவ்வாய்க்கிழமை (20) காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தை முற்றுகையிடுவோம். – என்றனர்.